அசல் வழக்கு எண். 188/2021 வா.சா.2 மோகன் த/பெ சிகாமணி

**21.03.2024 குறுக்கு விசாரணை**

1. கண்ணகி தெருவில் இருக்கும் என் வீட்டிற்கும், வாதி வீட்டிற்கும் இடைவெளி 2 கி.மீ இருக்கும். வாதியின் வழக்கில் நான் 2ம் சாட்சி ஆவேன். முதல் சாட்சி சுரேந்தர் ஆவார். முதல்விசாரணை வாக்குமூலத்தில் சில வெளிநபர் கடன்களை பைசல்செய்வதற்காக வாதியிடம் கடன் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு வெளிநபர்கள் கடன்கள் என்றால் எந்த எந்த கடன்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

2 பிரதிவாதி தனது குடும்ப செலவிற்காக கடன் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்கள் யாராவது கடனுறுதிச்சீட்டில் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இல்லை. பிரதிவாதி வீடு கட்டுவதற்காக கடன் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கட்டப்படும் வீடு என்ன நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

3. வழக்கு கடனுறுதிச்சீட்டில் வாதியின் வீட்டில் கையெழுத்து செய்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். அவ்வாறு முதல் விசாரணை வாக்குமூலத்தில் எந்த தேதியில் கையெழுத்து செய்தேன் என்று நினைவில்லை. முதல் விசாரணை வாக்குமூலம் ஒரே தாளில் இரண்டு பக்கங்கள் உடையதாகும்.

4. வழக்கு கடனுறுதிச்சீட்டை முருகன் என்பவர் எழுதி எடுத்துவந்தார். கடனுறுதிச்சீட்டில் வாதியும் பிரதிவாதியும் கையெழுத்து செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். வாதி, பிரதிவாதி யிடம் கடன் தொகையை பைசல் செய்யும்படி பல முறை கேட்டதாக சொல்லி உள்ளேன் என்றும் அவ்வாறு எத்தனை முறை கேட்டார் என்று எந்த தேதிகளில் கேட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. கடனுறுதிச்சீட்டில் 2% வட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. கடனுறுதிசீட்டில் போடப்பட்டுள்ள வட்டியை தான் அறிவிப்பில் சொல்லிஇருக்கிறார் என்றால் சரிதான்.

5. கடனுறுதிச்சீட்டில் நான் சாட்சி கையெழுத்து போட்ட விவரம் பிரதிவாதிக்கு தெரியும் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த விவரம் பிரதிவாதிக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் கடனுறுதிச்சீட்டில் நான் வாதி வீட்டில் வைத்து கையெழுத்து செய்யும்போது பிரதிவாதியும் அங்குதான் இருந்தார். அதனால் தெரியும். பிரதிவாதியிடம் அசல் வட்டி செலுத்தியதாக கேட்டேனா என்றால் இல்லை.

6. பிரதிவாதி அசல் வட்டியை வாதியிடம் செலுத்தியது எனக்கு தெரியுமா என்றால' அவ்வாறு பிரதிவாதி செலுத்தவில்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் சுரேந்தர் பற்றி எதுவும் சொல்ல வில்லை என்பதால் சுரேந்தர் எனக்கு முன்னர் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு சென்று விட்டாரா என்றால் இல்லை நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் இருந்தோம் அப்போது தான் கையெழுத்து போடப்பட்டது.

7. பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டில் அவரது கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளாரா என்றால் இல்லை. வாதி ஸ்ரீராம் நகரில் புதிய வீடு கட்டி அங்கு தான் 4,5 வருடங்களாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2023ம் ஆண்டு பிரதிவாதி அசல் வட்டி செலுத்தவில்லை என்று வாதி என்னிடம் சொன்னார்.

8. சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வழக்கறிஞர் தான் போன் மூலமாக சொன்னார். நான் வாதியிடம் அடி ஆளாக வேலை செய்து வருகிறேன் என்றும் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் சாட்சியம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.